

ஹரி ஸ்ரீனிவாசன் கவிதைகள்

## மறுப்பு

என்னைக் காலடியில் வீழ்த்த வைக்கும்
ஒவ்வோர் உன்றுக்கும்
என் மறுப்பு

துருப்பிடித்த பிச்சைத்
தகரக் குவளைக்கும்
கதவடைத்த குளிர் அறையில்
பத்திரமாய்ப் பலகாரம் தாங்கிவரும்
வெள்ளிரும்புத் தட்டுக்கும்
என் மறுப்பு

சேலை ஒதுக்கி வரும்
பெண் சாய உதடுக்கும்
முலையிருக்கு தூலி முனைப்புடனே
முன் பல்லில் காமமுடன்
என்னை வரவேற்கும்
இடைகள் பிரசுரிக்கும் இதழ்களுக்கும்
என் மறுப்பு

ஸ்வரமாறி ஸ்ருதி ஒன்றித்
தாள லயம் சொரிந்தென்னைத்
தலைகிறக்கும் பேரிசைக்கும்
வாத்திய ஒலிமாறி குரல் கன்றிக்
காமரசம் பிழிந்தென்னை
நிறையழிக்கும் இன்னிசைக்கும்
என் மறுப்பு